செய்தி வெளியீடு எண். 67-2017 நாள்: 24.03.2017

# விழுப்புரம் மாவட்டம் புவியியல் மற்றும் சுரங்கத்துறை சார்பாக அரசு புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள சாதாரண கல் குவாரிகளில் வழங்கப்பட்ட டெண்டரில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

******

விழுப்புரம் மாவட்டம் புவியியல் மற்றும் சுரங்கத்துறை சார்பாக அரசு புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள சாதாரண கல் குவாரிகளில் தமிழ்நாடு சிறு கனிமச்சலுகை விதிகள் 1959ன் விதி 8(1)(a)-ன்படி டெண்டருடன் இணைந்த பொது ஏலத்தில் குத்தகைக்கு விட 2017-ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் நாளில் வெளியிடப்பட்ட விழுப்புரம் மாவட்ட சிறப்பு வெளியீடு எண்.8-ல் மாவட்ட ஆட்சியரின் அறிக்கை என்ற தலைப்பில் சாதரண கல் குவாரி குத்தகைக்காக ஒப்பந்தப்புள்ளி மனுக்கள் கோருதல் குறித்த அறிவிப்பிற்கு, விழுப்புரம், திருக்கோவிலூர் மற்றும் கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டத்தைச் சார்ந்த வட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வானூர் வட்டம் திருவக்கரை புல எண்.40/1, குவாரி குத்தகை வழங்கும் பரப்பு 3.38.0, வகைப்பாடு கல்லாங்குத்து, குவாரி குத்தகை காலம் ஐந்தாண்டுகள் மற்றும் உளுந்தூர்பேட்டை வட்டம் புல எண்.182/1, குவாரி குத்தகை வழங்கும் பரப்பு 0.81.5, வகைப்பாடு கல்லாங்குத்து, குவாரி குத்தகை காலம் ஐந்தாண்டுகள் எனவும் பிரசுரம் செய்யப்பட்ட அட்டவணையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, இவ்வகைகள் இரண்டும் பொது ஏலத்திலிருந்து நீக்கம் செய்யப்படுகிறது.

மேலும், சங்கராபுரம் வட்டம் பரமநத்தம் புல எண்.52/2(பகுதி), குவாரி குத்தகை வழங்கும் பரப்பு 1.50.0, மொத்தப்பரப்பு 12.70.0, வகைப்பாடு பாறை, குவாரி குத்தகை காலம் பத்தாண்டுகளாக இருந்ததை, ஐந்தாண்டுகளாகவும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.